முருகப்பெருமான் துணை

**மகான் சூரியானந்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**12.02.2024**, திங்கட்கிழமை

1. எங்கு காணினும் பேதமடா
ஏனிந்த கலியில் அவலமடா
சங்கு முழங்கிட ஓங்காரத்தை
சற்குரு அரங்கன் விதைத்தாலும்
2. விதைத்தாலும் சாதி மத இன பேதம்
வீதி சண்டை போலத் தொடர்ந்து
பதைபதைக்குதப்பா சமூக சீர்கேடாய்
பதுக்கல் சுருட்டல் அரசியல் களத்தில்
3. களத்தில் தூய்மை இழந்து
கலைகட்டுதப்பா ஊழல் வகையாக
வளம் மிகுந்த புண்ணிய புவியெல்லாம்
வறுமை கண்டு வாடுதப்பா
4. வாட்டம் போக்கிடும் அரங்களை போற்றி
வழங்குவேன் சோபகிருது கலை திங்கள்
திட்டமுடன் இருபான்நவ திகதி சோமவாரம்
(சோபகிருது வருடம் தை மாதம் 29 ம் நாள், 12.02.2024, திங்கட்கிழமை)
துல்லிய ஆசியை சூரியானந்தரும் உரைப்பேன்
5. உரைக்கவே சுத்தசைவநெறி ஏற்று
உயர்வான தீட்சை ஆசி பெற்று
மறைபோற்றும் உபதேசங்களுடன்
மாதவசி குடிலின் அருளமுது உண்டுவர
6. வருவதுடன் ஞானிகள் மேலான
வருகின்ற முழுமதி பூசை கலந்து
தருமத்தில் உதவி ஆசிபெற
தரணியெங்கும் விழிப்புணர்வு கூடி
7. கூடியே இனபேதம் கடந்து
குருமார்க்கமே சிறந்ததென ஏற்று
நாடியே அரங்கா முருகா என
நாமசெபத்துடன் தேடி சரணாகதி

8. சரணாகதி கொண்டு செயல்பட
சகலருக்கும் ஞான பலம்
சரவண சோதி வடிவில் வந்து
சன்மார்க்க பலம் கூட நேரும்
9. நேருமை நீதி காக்கின்ற வண்ணம்
நிலவுலகின் அரங்கன் படைகள்
பெருமளவில் வளர்ந்து மாற்றம்
பிரணவக் குடிலில் இருந்து கிளம்பி
10. கிளம்பியே உலகம் எங்கிலும்
குருவரங்கன் அவதார மகிமை
விளங்கிட சுப்பிரமண்யர் ஞானம்
விசாலமாகி நிரம்பி இனிதே
11. இனிதே ஞானத் தலைமையும்
எங்கும் சமம் சமதர்மம் என
கனிவேலவன் வெளிப்பட ஞான ஆட்சி
கலியுகம் கண்டு சிறக்கும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–